# இலக்கிய மரபுகளில் தமிழ் நாடக வளர்ச்சி

**முனைவர் சி.ஆறுமுகம்**

**தமிழ்த் துறைத் தலைவர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

**வடலூர் 607 303. arumugam151972@gmail.com**

**16**

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டும் என்றால் அவற்றிற்கு ஒரு வரலாறு இருந்திடல் வேண்டும். அவற்றை மேய்பிக்கும் ஊடகமாக தான் நம் தமிழ் மொழியியல் இலக்கியங்கள், புராணங்கள் இதிகாசங்கள்,வரலாற்று பதிவுகள் போன்ற நூல்கள் நம் மரபுகளை பின்வரும் மக்களுக்கு வெளிபடுத்து ஒரு காலக் கண்ணாடியாக அமைந்துள்ளது. அவற்றின் ஒரு அங்கம் தன் தமிழில் நாடகக் கலையின் வளர்ச்சி.

நாடகக் கலையை நம் முன்னோர்கள் நடிப்பாலும் கலையாலும், அதை சிறப்பாக செய்துள்ளனர். அவற்றை சங்க இலக்கியம், தொல்காப்பியம், காப்பியம் போன்ற நூல்களின் மரபுகளின் அடிப்படையில் நாடகங்கள் தோன்றி அமைந்துள்ளன எனவும் தமிழர்களின் மரபை காக்கும் காப்பியங்களில் இடம் பெரும் நாடகக் கூறுகள் அவற்றின் வாயிலாக ஏற்படும் சமுதாய மாற்றங்கள் பற்றியும், கல் தோன்றி மண் தோன்ற காலத்தில் முன் தோன்றிய சங்க இலக்கியங்களில் நாடகக் கூறுகள், அவற்றில் காணப்படும் நடிப்பு, கலை பற்றிய செய்திகள், சிற்றிலக்கியங்களில் அறியப்படும் நாடகக் கூறுகள் தற்காலத்தில் நாடுதோறும் கிராமம் தோறும் நம் நாடகக் கலை எவ்வாறு வளர்ச்சி பெறுள்ளது என்னும் தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**முன்னுரை**

மனதில் தோன்றும் நிகழ்வுகள வெளிப்படுத்தி அதனை அனைத்து உயிர்களுக்கும் பொதுவாக. பகுத்து ஆய்ந்து அறியும் தன்மை கொண்ட மனிதன், உள்ளுணர்வு நிகழ்வுகளை, வெளிக்கொணர்வதற்கு அங்க அசைவுகளுடன் கூடிய மெய்ப்பாட்டுத்தன்மையை பயன்படுத்தி அதில் வெற்றியும் பெறுகிறான். தன் எண்ணங்களுடன் கூடிய உணர்வுகளைப் பிறருக்கு எடுத்துக்காட்டும் குறியீடாக இது திகழ்கிறது. வாய்மொழியாக எழுந்த தமிழ் எழுத்து மொழியாக வளர்ச்சி பெற்றபோது இயலும், இசையுமாகப் பரிணமித்து பிறர் மனதை நாடும் பொருண்மை உடையதாக தோற்றம் பெற்று நிகழ்த்துக்கலை எனும் தளத்தினை தனக்கே உரியதாக கொண்டுள்ளது. கண்களால் பார்த்தும், செவிகளால் கேட்டும், மகிழத்தகும் கலைகளை, நடனம், நாட்டியம், கூத்து, நாடகம் என பல சொற்களால் தொல் தமிழர் வழங்கினார். இதனை நிகழ்த்துக்கலைகள் என அழைக்கின்றனர். இதில் நாடக மரபின் முதற்கூறுகள் ஆராயத்தக்கதாகும்.

**தமிழ்நாடக மரபு**

தமிழ் நாடகம் இரு கூறுகளாக பழங்காலத்தில் வளர்ந்து வந்தமையை தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது.

*"நாடக வழக்கிலும் உலகியல் வழக்கினும்" (தொல். அகம் 56)*

எனக் குறிப்பிடும் அகத்திணைச் செய்திகளின் வழியாக ‘வேத்தியல்,பொதுவியல்’ என்ற இருவேறு தளங்களில் கூத்துக்கள் நிகழ்த்தப்பட்டிருப்பதாக உரையாசிரியர் இளம்பூரணர்

எடுத்துரைப்பார்.

நாடகம் எனும் சொல் தமிழ்ச் சொல்லல்ல எனக் கூறுபவரும் உண்டு. "பாரத சாத்திரத்துள் வரும் 'நாட்டிய தர்மி' எனும் சொல்லின் தமிழ்ப் பெயர்ப்பே நாடகம்" என்பார் வையாபுரிப் பிள்ளை. வேர்ச்சொல்லை ஆயும் வழி நாடு+அகம்=நாடகம் அதாவது 'உள்ளத்தை நாடு' என பொருள் உடையதாக அமைவது ஈண்டு நோக்கத்தக்கது. இயலிசையால் காதுக்கும். கூத்தால் கண்ணுக்கும் இன்பம் பயக்கும் இக்கலையினைக் 'கலைக்கரசு' 'நாகரிகத்திற்குக் கண்ணாடி' பாமர மக்களின் பல்கலைக் கழகம்' எனப் பலவாறாக புகழ்கிறார் கலைஞர் டி.கே. சண்முகம். பண்டைய காலங்களில் நாட்டியமும் நாடகமும் ஒன்றாகவே எண்ணப்பட்டன. 'நாட்டிய நாடகம்' என்பதைக் கூத்து என்ற பொதுச் சொல்லால் அழைத்தனர்.

'கைகளால் வல்லம் செய்யும் கூத்து கதை தழுவிய கூத்து' என அடியார்க்கு நல்லாரும், கதைத் தழுவாத கூத்து இசைக்கூத்து என 'இராசமாணிக்கனாரும்' விளக்குகின்றனர். நம் முன்னோர், தனிப்பாடல்களுக்கு அபிநயம் பிடித்து ஆடுவதை 'நாட்டியம்' என்றும், ஏதேனும் ஒரு கதையை தழுவி வேடமிட்டு ஆடுதல் 'நாடகம்' என்றும் அழைத்திருக்கிறார்கள். நாடகம் ஆடலும் பாடலும் கலந்தது என்பதற்குச் சான்றாக நாடகத்தை 'ஆட்டம்' என்ற சொல்லால் அழைக்கும் வழக்கத்தை இன்றளவும் பயன்படுத்துகின்றனர் கிராமவாசிகள். பிறர் செய்வது போலவே நாமும் செய்து காட்டுவது எனும் விளையாட்டுணர்ச்சியின் விளைவே நாடகம் என்பர். இது மரப்பாவை கூத்தாகவும், பொம்மலாட்டமாகவும், தோற்பாவைக் கூத்தாகவும். நிழற்பாவைக் கூத்தாகவும் வளர்ச்சிப் பெற்று, இறுதியில் உயிரற்ற பொம்மைகள் இயங்குவதற்கு மாறாக உயிருள்ள மாந்தர்களே வேடம் புனைந்து ஆடும் நிலைக்கு வந்து நாட்டியமாகி, நாட்டிய நாடகமாகி, இன்றைக்கு நாடகமாகவே முன்னேறியுள்ளது' என்பர் மது.ச. விமலானந்தம்.

இனி 'நட்டு' என்ற சொல்லின் வழக்கினைப் பார்ப்போம். நட்டு (வளைவு) + அன் நட்டுவன், நடனத்திற்குரிய அசைவுகளை தாமும் அபிநயத்துக்கூறும் நடன ஆசிரியரை இவ்வாறு அழைத்ததாக சிலம்பு அரங்கேற்றக் காதை கூறுகிறது.

**காப்பியங்களில் நாடக கலை**

"பண்ணின்ற கூத்து பதினொன்றும்" (சிலம்பு, பாடல் -175)

"நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து" (சிலம்பு, பாடல் -40)

"நாடக மேத்தும் நாடகக் கணிகையோடு" (சிலம்பு, பதிகம்-15)

என வரும் சிலப்பதிகாரத் தொடர்கள் கூத்து, நாட்டியம், நாடகம் எனும் நிகழ்த்துக்கலையைக் கூறினமையாலும், சிலப்பதிகாரம் நாடக காப்பியம் என புகழப்படுவதாலும், நாடகம் சிலப்பதிகாரம் தொட்டே ஒரு முறை சார்ந்த வடிவினைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது எனலாம்.

சிலப்பதிகாரத்தின் உரை வாயிலாக, நாடக அரங்கின் அமைப்பு, நுட்பங்களும், தூண்களின் நிழல் தரையில் விழா வண்ணம் விளக்கு அமைத்த வகையும், திரைச் சீலைகளான ஒருமுக எழினி, பொருமுக எழினி காந்துவால் எழினி போன்றவையும், கூத்துக்களின் வகைகளைப் பற்றியும் குறிப்பிடுவதால் பண்டையகாலத்தில் தமிழ் நாடகம் தலைசிறந்து விளங்கியவை தெரிய வருகிறது.

**சங்க இலக்கியங்களில் நாடகக் கூறு**

நாடகத்தின் பொதுக் கூறாக விளங்கிய கூத்துக்களைப் பற்றிய அடையாளங்களும், அதன் நிகழ்த் தளங்களையும் சங்க இலக்கியங்களுடன் கண்டு கொள்ள முடிகிறது.

இளமகளிர் கூட்டமாகச் சேர்ந்து ஆடும் கூத்தினை மதுரைக்காஞ்சியும், குறுந்தொகையும், 'துணங்கைக் கூத்து ' எனக் குறிப்பிடுகின்றன.

"மகளிர் தழீஇய துணங்கையானும்" எனும் ஆதிமந்தியாரின் பாடல் இதற்குச் சான்றாகும். கன்னிப்பெண்கள் தைத்திங்களில் தாம் கைக்கொண்ட உண்ணா நோன்பு முடிந்ததும் ஆடுவது 'குரவைக் கூத்து' எனப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகிறது. வேலனாக வேடம் 1 பூண்ட கணியன் ஆடுவது 'வெறியாட்டு' என்கிறது நற்றிணை. ஆடவரும் கேளிரும் சேர்ந்து ஆடும் நடனத்தை 'வாடா வள்ளி' என்று பத்துப்பாட்டு குறிப்பிடுகிறது. அறுவடைக் காலங்களில் பலர் ஆம்பல் இலையில் மதுவருந்தி மயங்கி களிப்பில் ஆடுவர் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

இதன்வழி நாடகத்தின் முற்கூறாக கூத்துக்கள் வளர்ந்து வந்தமை அறிந்து கொள்ள முடிகிறது.

**சிற்றிலக்கியங்களில் நாடகக் கூறு**

யாப்பு வடிவ இலக்கியங்களும், மரபு வழிக் கூத்துக்களும் நாடகக் கூறுகளைக் கொண்டிலங்கின. இதன் தாக்கம் கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் 'பள்ளு', 'குறவஞ்சி', 'பரணி', 'கலம்பகம்' போன்ற சிற்றிலக்கியங்களில் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களின் வழி எளிய மக்களின் வாழ்க்கை முறைகள் கூத்தின் முறையால் வெளிக்காட்டப்பட்டுள்ளன என்பதை உணரமுடிகிறது.

பிற்காலத்தில் மக்கள் இறைவழிபாடுகளுடன் கூடிய நம்பிக்கை சார்ந்து, கோவில் விழாக்களில், மக்கள் கூடும் இடங்களில் நாடகமானது நிகழ்த்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

மாரியம்மன் அருள் வேண்டி மழை பொழிய, நாடு செழிக்கக் கூத்தாடுதல் வேண்டும் என நம்பினோர் 'விராட பருவத்தை நடித்தால் மழை பொழியும் என்று நம்பினர். இன்றும் அம்மரபினை மக்கள் நம்புகின்றனர்.குழந்தைப்பேறு வாய்க்காதவர்கள் அம்மனுக்குக் கூத்து நடத்தி வேண்டிக் கொண்டதாகவும் தெரியவருகிறது. இத்தகைய வேண்டுதலுக்கு சத்தியவான் சாவித்திரி, நாடகத்தை நடத்தி இருக்கின்றனர். ஊரின் நலம், மழை வேண்டி கோவலன் நாடகம், வள்ளித்திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ச்சுனன், வில்வளைத்து மாலையிடல், விராடபருவ நாடகம் ஆகியவற்றை நடத்தியுள்ளனர். திருமணம் நடக்க வேண்டுதல் செய்யும்போது சீதாகல்யாணம். மீனாட்சிக்கல்யாணம் போன்ற நாடகங்கள் நடத்தப் பெற்றிருக்கின்றன.

காலந்தோறும் பயின்று வந்த மரபுக் கட்டுகளை அவிழ்த்து இன்று சமூக அரசியல், விடுதலை போன்ற தளங்களில் பயில்முறை கலையாகவும், தொழில்முறைக் கலையாகவும், நாடகம் வளர்ந்து வருகின்றது. தமிழுலகிற்கு நாடகவியல் எனும் நாடக இலக்கணத்தை யாத்து தந்த 'பரிதிமாற்கலைஞர்' தொடங்கி ஒரு நீண்ட வரலாற்றை உடைய நாடகக்கலையானது, இன்று பல்வேறு தளங்களில் புதிய பரிணாமத்துடன் புரட்சிகரமான நாடகக் குழுக்களாகச் செயல்பட்டு இயங்கி வருகின்றன. நவீனத்துவம், பின் நவீனத்துவம் என அதன் எல்லை விரிந்து வளர்ந்து காணகிடக்கின்றன .

**முடிவுரை**

சமூக மாற்றங்களினாலும், மக்களின் உளவியல் புழுக்கத்தினாலும் நீண்ட நெடிய நிகழ்வுகளை ஏற்றுக் கொள்ளாத நிலை இன்று மக்கள் மனதில் உலவி வருகிறது. இருப்பினும் மக்கள் மனத்துன்பங்களையும், அவர்களது பிரச்சினைகளையும் எடுத்துச் செல்லும் வடிவோடு நிகழ்த்தப்படுவதால் இன்று நாடகம் பல்வேறு மாற்றங்களை அடைந்து மக்கள் மனதைத் தொட்டு நிற்கிறது. புராதனம் கலந்த மரபுக் கலையுடன் கூடிய நாடகங்கள் கிராமங்கள் தோறும் நிகழ்த்தப்படுகின்றன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

**சாண்றோன் விளக்கம்:**

1. (தொல். அகம் -56)
2. (சிலம்பு, பாடல் -175)
3. (சிலம்பு, பாடல் -40)
4. (சிலம்பு, பதிகம்-15)